# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# பத்தாம் பத்து

## முதல் திருமொழி - ஒருநல்சுற்றம்
## பல திவ்யதேசங்கள்

** ஒரு நல் சுற்றம் * எனக்கு உயிர் ஒண்பொருள் *
வரு நல் தொல் கதி * ஆகிய மைந்தனை **
நெருநல் கண்டது * நீர்மலை இன்று போய் *
கரு நெல் சூழ் * கண்ணமங்கையுள் காண்டுமே 1

** பொன்னை மாமணியை * அணி ஆர்ந்ததோர்
மின்னை * வேங்கடத்து உச்சியில் * கண்டு போய் **
என்னை ஆளுடை ஈசனை * எம்பிரான்
தன்னை * யாம் சென்று காண்டும் * தண்காவிலே 2

வேலை ஆலிலைப் * பள்ளி விரும்பிய *
பாலை ஆர் அமுதத்தினைப் * பைந்துழாய் **
மாலை ஆலியில் * கண்டு மகிழ்ந்து போய் *
ஞாலம் உன்னியைக் காண்டும் * நாங்கூரிலே 3

துளக்கமில் சுடரை * அவுணன் உடல்
பிளக்கும் மைந்தனைப் * பேரில் வணங்கிப் போய் **
அளப்பில் ஆரமுதை * அமரர்க்கு அருள்
விளக்கினை * சென்று வெள்ளறைக் காண்டுமே 4

சுடலையில் * சுடு நீறன் அமர்ந்ததோர் *
நடலை தீர்த்தவனை * நறையூர் கண்டு ** என்
உடலை உள் புகுந்து * உள்ளம் உருக்கி உண் *
விடலையைச் சென்று காண்டும் * மெய்யத்துளே 5

வானை ஆரமுதம் * தந்த வள்ளலை *
தேனை நீள் வயல் * சேறையில் கண்டு போய் **
ஆனை வாட்டி அருளும் * அமரர் தம்
கோனை * யாம் குடந்தைச் சென்று காண்டுமே 6

கூந்தலார் மகிழ் கோவலனாய் * வெண்ணெய்
மாந்த அழுந்தையில் * கண்டு மகிழ்ந்து போய் **
பாந்தள் பாழியில் * பள்ளி விரும்பிய *
வேந்தனைச் சென்று காண்டும் * வெஃகாவுளே 7

** பத்தர் ஆவியைப் * பால் மதியை * அணித்
தொத்தை * மாலிருஞ்சோலைத் தொழுது போய் **
முத்தினை மணியை * மணிமாணிக்க
வித்தினை * சென்று விண்ணகர்க் காண்டுமே 8

கம்ப மா களிறு அஞ்சிக் கலங்க * ஓர்
கொம்பு கொண்ட * குரை கழல் கூத்தனை **
கொம்புலாம் பொழில் * கோட்டியூர்க் கண்டு போய் *
நம்பனைச் சென்று கண்டும் * நாவாயுளே 9

** பெற்றம் ஆளியைப் * பேரில் மணாளனை *
கற்ற நூல் * கலிகன்றி உரை செய்த **
சொல் திறம் இவை * சொல்லிய தொண்டர்கட்கு *
அற்றம் இல்லை * அண்டம் அவர்க்கு ஆட்சியே 10

**அடிவரவு:** ஒரு பொன்னை வேலை துளக்கம் சுடலையில் வானை கூந்தல் பத்தர் கம்பம் பெற்ற இரக்கம்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**